# இயேசுவின் தொனி

## தீர்க்கதரிசன மாத இதழ்

மலர்:01 செப்டம்பர் -2025 இதழ் :02






கடைசிக்கால

# தீர்க்கதரிசிகள்

கவனிக்க வேண்டிய காரியங்கள்

# ஆசிரியர் பக்கம்



கிறிஸ்துவில் பிரியமானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிருபையும் சமாதானமும் உண்டாகும்படி வாழ்த்துகிறேன். இந்த ஆண்டு இப்போதுதான் துவங்கினதுபோல இருந்தது. அதற்குள் எட்டு மாதங்கள் உருண்டோடிவிட்டது.

உலகம் முழுவதிலும் பல்வேறு விதமான தீமையான காரியங்கள், ஏராளமான இயற்கை பேரிடர்கள், கொத்துக் கொத்தான மரணங்கள் நிகழ்ந்தன. ஆயினும் கர்த்தருடைய கரங்களோ நம்மைத் தாங்கி வழிநடத்தியது. இம்மட்டும் நம்மைக் காத்துக் கொண்ட கர்த்தருக்கு மனதார நன்றிகளைச் செலுத்த வேண்டும்.

விஞ்ஞானம் என்கிற பெயரில் பல மாயையான காரியங்கள், தீமைகள், நன்மையைப்போல அனைத்து துறைகளையும் துரிதமாக ஆக்கிரமிப்பதையும், இன்றைக்கு ஒட்டுமொத்த உலகின் கவனமும் அதை நோக்கித் திருப்பப்படுகிறதையும் நம்மால் தெளிவாக காண முடிகிறது. இப்படி சாத்தான் தனக்கென்று ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தும்படி தீவிரமாய் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்க, சாத்தானின் திட்டங்களையும், தீமைகளையும் வேரறுக்க கர்த்தர் தமக்கென்று பலத்த காரியங்களை நிறைவேற்றும் ஒரு கடைசிக்கால தீர்க்கதரிசன சேனையை உருவாக்கிக் கொண்டு வருகிறார்.

இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக இந்த பூமிக்கு வருவதற்கு முன்பதாக பாதைகளை செவ்வைப்படுத்தவும், இருளைத் துரத்தவும், தீர்க்கதரிசன ஒளியை உலகம் முழுவதும் பரவச் செய்யவும் கடைசிக்கால தீர்க்கதரிசன சேனை உருவாக்கப்படவும், எழுப்பப்படவும் வேண்டுமென்கிற உன்னத திட்டத்தோடு மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் தீர்க்கதரிசன உபவாச ஜெபமானது இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் நமது இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய அனுபவத்தோடு, கண்கள் திறக்கப்பட்டு, சாத்தானின் திட்டங்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசன அனுபவம் பெற்ற அநேகர் தங்கள் ஆவிக்குரிய அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை தேர்வு செய்து தேவ நாம மகிமைக்கென்றும், உங்கள் விசுவாசம் பலப்படும்படியாகவும் வெளியிட்டிருக்கிறோம். உங்கள் ஜெபத் தேவைகளுக்காக அல்லது மேலதிகமான தகவல்களைப் பெற விரும்பினால் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.!

கிறிஸ்துவின் பணியில்

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

**VOICE OF JESUS MINISTRIES**
**P.O.BOX : 23, RAMANATHAPURAM**
**623501, TAMILNADU, S. INDIA**
**CONTACT : (+91) 9788 404 333**



# தீர்க்கதரிசனம் சொல்கிறவர்கள்

## எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

*தீர்க்கதரிசன செய்தி*

சகோ. வின்சென்ட் செல்வகுமார்

கடைசிக்காலத்தில் ஒரு தீர்க்கதரிசனத் தலைமுறை எழும்புவது தவிர்க்க முடியாத காரியம். காரணம், இதைக்குறித்து வேதம் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைத்துச் சொல்லியிருக்கிறது. யோவேல் தீர்க்கதரிசி கிறிஸ்துவுக்கு ஏறத்தாழ நானூறு வருடங்களுக்கு முன்பாக வாழ்ந்தவர். அவருடைய தீர்க்கதரிசனப் புத்தகத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். யோவேல் 2: 28ல் நாம் இதை வாசிக்கலாம்.

*நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்: அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்: உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.*

*ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அவர்களும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்.*

இதே காரியத்தை அப்போஸ்தலர் நடபடிகள் 2: 17-18 வசனங்களிலும் காணலாம். கடைசிக்காலத்தில் இந்தச் சம்பவம் நடந்தேறும் என்று வேதம் சொல்வதால், நாம் வாழும் இந்தக் காலத்தில்தான் இந்த தீர்க்கதரிசன அபிஷேகமானது ஊற்றப்படும் என்று அறிய முடிகிறது. இது வழக்கமாக நாம் பெற்றுக் கொண்டிருக்கிற புத்திரசுவீகார அபிஷேம் அல்ல. இது கர்த்தருக்கு விசேஷமான தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்வதற்காக, தம்முடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கும் தீர்க்கதரிசன அபிஷேகம்.

இந்த அபிஷேகம் நம் பிள்ளைகளிடத்தில் இறங்கி வரும்போது அவர்களைத் தீர்க்கதரிசனம் சொல்ல வைக்கிறது. நம் வாலிபர்கள் மேல் இறங்கும்போது, அது அவர்களை தரிசனங்களைக் காண வைக்கிறது. வயதான மூப்பர்கள் மேல் ஊற்றப்படும்போது, அவர்களை தேவன் தரும் சொப்பனங்களைப் பார்க்க வைக்கிறது. இது மாத்திரமல்ல, கர்த்தர் எழுப்பியிருக்கும் எல்லா ஊழியக்காரர்களின் மேலும் இந்த அபிஷேகம் இறங்குகிறது. அப்பொழுது அது அவர்களைத் தீர்க்கதரிசனம் உரைக்க வைக்கிறது. இப்போதுள்ள காலத்தில் ஐந்துவிதமான ஊழியத்தில் தீர்க்கதரிசனம் ஒரு தனி ஊழியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த

அபிஷேகம் சொரியப்படும் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைப்பது ஒரு தனி ஊழியமாக இல்லாமல் எல்லா ஊழியர்களிடத்திலும் இணைந்து செயல்படப் போகிறது.

அதாவது, சுவிசேஷகராக இருப்பவர் இந்த அபிஷேகத்தைப் பெற்றவுடன் தீர்க்கதரிசன சுவிசேஷகராகவும், போதகராயிருப்பவர் தீர்க்கதரிசனப் போதகராகவும், மேய்ப்பர் தீர்க்கதரிசன மேய்ப்பராகவும் மாறிவிடுவார்கள். தங்கள் ஊழியங்களோடு இவர்கள் தீர்க்கதரிசனமும் உரைப்பார்கள்.

இந்தத் தீர்க்கதரிசன அலையானது விரைவில் தேசத்தில் இறங்கிவரும். நம்முடைய அனுமானம் சரியாயிருக்குமானால், அது பின்மாரிக் காலமான கடைசிக்கால எழுப்புதல் நாட்களில் நிறைவேறும்.

பிற ஊழியங்களுக்கும் தீர்க்கதரிசன ஊழியங்களுக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது. தீர்க்கதரிசனம் உரைப்பவர்களுக்கென்று சில முக்கியமான விதிமுறைகள் இருக்கிறது. இந்த விதிமுறைகளை சரியாகக் கடைப்பிடிக்காவிட்டால், ஒன்று கள்ளத் தீர்க்கதரிசனம் உரைக்க நேரிட்டுவிடும். அல்லது அரைகுறையான தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டியதாகிவிடும். அரைகுறைத் தீர்க்கதரிசனங்கள் எப்போதுமே ஆபத்தானவை. நேர்மையான மற்றும் முழுமையான தீர்க்கதரிசனங்களை உரைக்க வேண்டுமானால் அதற்கான விதிமுறைகளை முதலாவதாக நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

### 01. மனித சத்தங்களைத் தவிருங்கள் :

முதலாவது, மனிதர்களால் கேள்விப்பட நேரிடும் எதையும் நம்பி அதை மனதில் வைத்துக்கொண்டு தீர்க்கதரிசனம் உரைக்காதீர்கள். பல சமயங்களில் உங்களைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் அல்லது செய்தி ஊடகங்கள் உங்கள் மனதில் சில அபிப்ராயங்களை ஏற்படுத்திவிடுவார்கள். அவைகளை மனதில் வைத்துக்கொண்டு அதை வெளிப்பாடாக்கி உரைத்துவிடாதீர்கள். அது ஒருவேளை நிறைவேறினாலும், நீங்கள் உங்கள் வரத்தை இழந்துபோக நேரிட்டுவிடும். நீங்கள் உரைக்கும் வார்த்தை கர்த்தரிடத்திலிருந்துதான் வந்ததா என்பதை முழுவதுமாக அறிந்தே தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். நீங்கள் கேள்விப்பட்ட ஒரு செய்தியையே நீங்கள் தீர்க்கதரிசனமாக சொல்ல ஏவப்பட்டாலும், அதை நீங்கள் தவிர்த்துவிடுவது நல்லது. காரணம், நீங்கள் அறிந்திருக்கிற ஒரு செய்தியையே தீர்க்கதரிசனமாக உரைத்தால், நாளாவட்டத்தில் உங்கள் தீர்க்கதரிசனத்தின் மேல் உங்களுக்கே சந்தேகம் வந்துவிடும். தீர்க்கதரிசனம் உரைப்பவர்களுக்கு விசுவாசம் மிகவும் அவசியம்.

### 02. தீர்க்கதரிசனத்தில் பிறரைப் பின்பற்றாதீர்கள் :

பிறர் சொன்ன தீர்க்கதரிசனங்களை பின்பற்றி நீங்களும் அதையே காப்பியடித்து தீர்க்கதரிசனம் உரைக்காதீர்கள். அது உங்கள் வரத்தின் கூர்மையை மழுங்க வைத்து அதைப் பலவீனமாக்கி விடும். சிலர் யாராவது நம்பகமான ஆட்கள் தீர்க்கதரிசனம் உரைத்தால் அதை அடியொற்றித் தாங்களும் சில வார்த்தைகளை மாத்திரம் கொஞ்சம் அங்குமிங்கும் மாற்றி, தீர்க்கதரிசனம் போல உரைத்துவிடுவார்கள்.

அதற்கு நல்ல உதாரணம், 1 இராஜாக்கள் 22ம் அதிகாரத்தில் யோசபாத் காலத்தில் யுத்தத்திற்குப் போகலாமா, ஜெயம் கிடைக்குமா என்று கர்த்தரிடம் விசாரித்தபோது, சுமார் 400 பேர் தீர்க்கதரிசனம் உரைத்து ஒரே கருத்தாய் போகலாம், ஜெயம் நிச்சயம் என்றார்கள். மிகாயா என்றவொரு உண்மையான தீர்க்கதரிசி மாத்திரம் போரில் ஜெயம் கிட்டாது என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். இதனால் மற்ற தீர்க்கதரிசிகளின் தாக்குதலுக்கும் உள்ளானார். ஆயினும் தான் சொன்னதிலிருந்து பின்வாங்கவில்லை. எத்தனை பேர் சொன்னாலென்ன, கர்த்தர் எனக்குச் சொன்னதையே சொல்வேன் என்றார். கடைசியில் மிகாயா சொன்னதுதான் நிறைவேறியது.

பின்னே ஏன் அந்த நானூறு பேர் ஒன்றுபோல சொன்னார்கள்? முதலில் யாராவது ஒருவர் சொன்னதைப் பின்பற்றி மற்ற எல்லாரும் அதே கருத்தை வெவ்வேறு வடிவங்களில் சொல்லியிருப்பார்கள். யாரும் கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்று விசாரிக்கவுமில்லை, கர்த்தருடைய வார்த்தைக்காக காத்திருக்கவுமில்லை. நமக்கு முந்தி யாராவது சொல்லியிருக்கிறார்களா என்பதைக் கவனித்து அதை அப்படியே அல்லது தங்கள் கற்பனைகளையும் கொஞ்சம் கலந்து தீர்க்கதரிசனமாக உரைத்திருப்பார்கள். இவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை விட, முந்திச் சொன்னவர்களின் வார்த்தையின் மேல்தான் விசுவாசம் அதிகம்.

இதில் ஆபத்து யாருக்குத் தெரியுமா? தீர்க்கதரிசனம் உரைத்தவனுக்குத்தான். இப்படி தீர்க்கதரிசனம் சொல்லிப் பழகுகிறவர்கள் நாளடைவில் கர்த்தரோடு தங்களுக்கிருக்கும் தொடர்பை இழந்துவிடுவார்கள். மனித சத்தங்களையும், மனித அபிப்ராயங்களையுமே தேட



ஆரம்பிப்பார்கள். கடைசியில் ஒரு பொய்யான, போலியான தீர்க்கதரிசியாக மாறிவிடுவார்கள்.

### 03. யாருடைய நிர்ப்பந்தத்திற்காகவும் தீர்க்கதரிசனம் உரைக்காதீர்கள் :

கர்த்தர் எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலும் உங்களைக் கொண்டு தீர்க்கதரிசனம் உரைக்கவேண்டும் என்று அவசியமில்லை. கர்த்தர் வெளிப்பாடுகளைத் தரும்போது மாத்திரம் பேசுங்கள். யாரும் நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதற்காக மனதில் தோன்றிய ஏதோவொன்றை தீர்க்கதரிசனமாகச் சொல்லிவிடாதீர்கள். தீர்க்கதரிசிகளுக்கு இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் வருவது சகஜம். நீங்கள்தான் அதில் கவனமாகச் செயல்பட வேண்டும்.

சிலர் தங்களுக்குச் சாதகமான வார்த்தைகளைப் பெறவேண்டி தீர்க்கதரிசிகளை நிர்ப்பந்திப்பார்கள். நாம் முதலில் பார்த்த மிகாயாவையே எடுத்துக்கொள்ளுங்கள். மிகாயாவை அழைத்து வர ராஜா ஒரு ஆளை அனுப்புகிறான். அந்த ஆள் மிகாயாவை அழைத்துவரும் வழியில், ''எல்லாத் தீர்க்கதரிசிகளின் வாக்கும் ஒரே மாதிரியிருக்கிறது. நீயும் ராஜாவுக்கு சாதகமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு.'' என்றான். (1 இராஜாக்கள் 22:13). பிலேயாமைக் கூட பணத்தைக் கொடுத்து, தங்களுக்குச் சாதகமாக தீர்க்கதரிசனம் சொல்ல பாலாக் நிர்ப்பந்தித்தான்.

இதுபோன்ற நிர்ப்பந்தங்கள் எத்தனைதான் வந்தாலும் நீங்கள் கர்த்தர் சொன்னாலொழிய, யாரையும் பிரியப்படுத்தவோ, அல்லது நம்மிடம் தீர்க்கதரிசனம் எதிர்பார்க்கிறார்கள் என்பதற்காகவோ, தீர்க்கதரிசனம் உரைக்காவிட்டால் மதிக்க மாட்டார்கள் என்ற கணக்கிலோ மனதில் பட்டதை தீர்க்கதரிசனமாக சொல்லிவிடாதீர்கள். அது உங்கள் வரத்தை இழக்கப்பண்ணிவிடும்.

தீர்க்கதரிசனம் என்பது கர்த்தருடையது. தீர்க்கதரிசிகள், கர்த்தர் பேச விரும்புகையில் பயன்படுத்தப்படும் கருவிகள் மாத்திரமே. தீர்க்கதரிசனத்தை எந்த மனிதனும் தன்னிஷ்டப்படி பேசிவிட முடியாது. தீர்க்கதரிசனம் என்பது கடவுளுடைய வார்த்தை என்ற சிந்தை தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனுக்கும் சரி, கேட்கிறவனுக்கும் சரி, கட்டாயம் இருக்க வேண்டும்.

### 04. தேவனுடைய காலங்களையும், திட்ட ஒழுங்குகளையும் அறிந்திருங்கள்:

தீர்க்கதரிசன வரமுடையவர்கள் அதிகமாக வேதத்தைப் படிக்கிறவர்களாக இருக்க வேண்டியது அவசியம். காரணம், எந்தத் தீர்க்கதரிசனமும் வேதவசனத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். தீர்க்கதரிசனம் எப்போதும் தேவனுடைய வார்த்தைக்கு முரண்படாது. அபிஷேக அனுபவம் கிடைத்து, ஒன்றிரண்டு தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லிவிட்டால், தங்கள் மனதில் தோன்றுகிற எல்லாமே தீர்க்கதரிசனம்தான் என்று நம்பி சிலர் தாங்கள் நினைக்கிறதையெல்லாம் தீர்க்கதரிசனமாக சொல்லிவிடுவார்கள்.

தீர்க்கதரிசியாகவே இருந்தாலும், அவன் மனதில் தோன்றுகிற எண்ணங்களெல்லாம் தீர்க்கதரிசனமாகிவிடாது. அது வேதத்தோடு பொருந்திப் போகவேண்டும். தீர்க்கதரிசிகள் வேதத்தை வாசிப்பது என்பது வெறுமனே வாசிப்பதல்ல. காரியங்களை விளங்கிக்கொண்டு, கவனமாக ஆராய்ந்து வாசித்தறிந்திருக்க வேண்டும். தானியேலை இதற்கு நல்ல ஒரு உதாரணமாகச் சொல்லலாம். தானியேல் 9:2 ல் வாசித்துப் பாருங்கள், எரேமியாவின் புத்தகத்தை வாசித்து, அதில் சொல்லப்பட்டிருக்கும் கால அளவைக் கணக்கிட்டு ஆராய்வு மனப்பான்மையுடன் அதை வாசித்தறிந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக, அமெரிக்காவிலிருந்து ஒரு செய்தி காட்டுத்தீ போலப் பரவியது. வருகிற செப்டம்பர் மாதம் இன்ன தேதியில், சந்திரன் இரத்தமாக மாறும். அன்றைக்கே உலகத்தின் அழிவு உண்டாகிவிடும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அதையொட்டி, நிறையப் புத்தகங்கள் அச்சிட்டு செப்டம்பருக்குள் விற்றுத் தீர்த்தார்கள். அங்கே கிளம்பிய வதந்திக்கு

இந்தியாவில் கூட நடுங்கினார்கள். கடைசியில் நடந்ததென்ன, உலகம் அழிந்ததா, இல்லையா? என்று கேட்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

இதுபோன்ற அரைகுறை தீர்க்கதரிசனங்களுக்கும், பயங்களுக்கும் காரணம் என்னவென்று யோசித்தால், வேதத்தையும், தேவனுடைய திட்ட ஒழுங்குகளையும் குறித்த ஒரு தெளிவு இவர்களுக்கு இல்லை என்பதையும், வேதத்தை விட, தாங்கள் பார்க்கிற, கேட்கிற காரியங்கள் மற்றும் சுய அபிப்ராயங்களுக்கு இடங்கொடுக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. வானியல் கணக்கின்படி நான்கு வருடங்களுக்கு ஒருமுறை சந்திரன் சிவப்புநிறமாக மாறுவது வழக்கம். அந்தமுறை சற்று அதிக சிவப்பாகத் தோன்றும் என்று விஞ்ஞானிகள் அறிவித்ததை கேள்விப்பட்டு, தங்கள் தீர்க்கதரிசனத்தில் உலக அழிவு என்று சொல்லிவிட்டார்கள். கடைசிக்காலத்தின் அடையாளத்தில் சந்திரன் இரத்தமாக மாறும் என்பது மாத்திரமல்ல, அதையொட்டி சூரியன் இருளாக மாறும் என்றும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவில்லை போல.

மாத்திரமல்ல, இன்னும் நிறைவேற வேண்டிய பல காரியங்கள் இருக்க, சந்திரன் சிவப்பாக மாறிவிட்டது என்பதற்காக அதையெல்லாம் முந்திக்கொண்டு உலகம் அழிந்துவிடுமா என்ன?

இது வேதத்தை சரிவர புரிந்துகொள்ளாமலிருப்பதினால் வரும் பிரச்சனைதானே? தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள் வேதத்தைப் பகுத்து, நிதானித்து அறிந்துகொண்டவர்களாக இருத்தல் அவசியம். இல்லாதபட்சத்தில்தான் இப்படிப்பட்ட குழப்பமான தீர்க்கதரிசனங்கள் உண்டாகிவிடும்.

கடைசிக்காலத்தில் எழும்பப்போகும் தீர்க்கதரிசனத் தலைமுறையினர் இதில் எல்லாம் வெகு கவனமாகச் செயல்பட வேண்டும். முறையாக பயன்படுத்தப்படாத எந்த வரமும் ஆபத்தானதாக மாறிவிடும். சரியாக பயன்படுத்தப்படும் தீர்க்கதரிசன வரம் கொண்டவர்களால் மாத்திரமே, கர்த்தர் கடைசிக்காலத்தில் தீர்க்கதரிசனத் தலைமுறையினரை எழுப்புவதின் முழுமையான நோக்கம் நிறைவேறும். ஆமென்.!


(+91) 9788 404 333

ஜெப உதவி மற்றும் தகவல்களுக்கு எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்

**முகவரி**

**இயேசுவின் தொனி**
**தபால் பெட்டி எண் : 23**
**இராமநாதபுரம் - 623501**

## சுவிசேஷ கைப்பிரதிகள்

உங்கள் பகுதிகளில் சுவிசேஷத்தைப் பரவச் செய்ய விரும்பினால் எங்களிடம் சுவிசேஷ கைப்பிரதிகள் இருக்கின்றன. தங்களுக்குத் தேவைப்பட்டால் எங்கள் அலுவலகத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.





# ஊழிய அறிக்கை

## தீர்க்கதரிசன உபவாச ஜெபம்

**09 ஆகஸ்ட் 2025**

இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் நமது இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதியன்று தீர்க்கதரிசன உபவாசக் கூட்டம் நடைபெற்றது. கர்த்தருக் கென்று பாதைகளைச் செவ்வைப்பண்ணுகிற கடைசிக்கால தீர்க்கதரிசனத் தலைமுறைகளை எழுப்பும் நோக்கத்துடன் நடத்தப்படுகின்ற இந்த கூட்டத்தில், பல மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந் தும் முன்பதிவு செய்து தேர்வு செய்யப்பட்ட ஜனங்கள் ஆவலாய் கலந்து கொண்டார்கள்.

காலை 9.30 மணியளவில் சகோதரர் ஜேம்ஸ் சிவக்குமார் அவர்கள் ஆரம்ப ஜெபத்தை ஏறெ டுக்க, சகோ பிரகாஷ் மற்றும் சகோ கிறிஸ்டோ பர் அவர்கள் இருவரும் இணைந்து பாடல் பகுதியை நடத்தினார்கள். தேவ ஆவியானவரின் ஆளுகை ஜனங்களை நிரப்பி மூடினது. தொடர்ந்து, கர்த்தர் பேசிச் சொன்ன நான்குவித அபிஷே கங்களுக்காக சகோதரர் ஜேம்ஸ் ஸ்வர்ணராஜ் மற்றும் குழுவினரால் ஜெபங்கள் ஏறெடுக்கப் பட்டது. ஜனங்கள் வைராக்கியமாய் ஜெபிக் கும்படி ஆவியானவர் நடத்தினார். சகோ தரர் சதீஷ் அவர்கள் தேசத்தில் உண்டாகும் பஞ்சங் கள் என்கிற தலைப்பில் கர்த்தர் வெளிப்படுத் தின தீர்க்கதரிசன வார்த்தைகளை விளக்கிச் சொல்லி ஜெபத்தில் நடத்தினபோது, ஜனங்கள் மிகுந்த பாரத்தோடு உத்திரவாதம் செய்து ஜெபித் தார்கள்.

அதைத் தொடர்ந்து, சகோதரர் ஜோனத்தான் ஜேம்ஸ் மற்றும் சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான் அவர்கள் வந்திருந்த ஜனங் களை ஆராதனைக்குள் வழிநடத்தினார்கள். கர்த்தருடைய மகிமையின் பிரசன்னம் அந்த இடம் முழுவதும் நிரம்பி இருந்ததை யாவரும் உணர முடிந்தது.

இக்கூட்டங்களின் நோக்கத்தையும், தரிசனத்தையும் குறித்து மதிப்பிற்குரிய தீர்க்கதரிசி சகோதரர் வின்செண்ட் செல்வகுமார் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். பின்பு, தேசங்களில் வரும் பஞ்சத்தைக்குறித்து தேவன் பேசின தீர்க்கதரிசன வார்த்தைகள் இந்நாட்களில் எப்படி நிறைவேறிக் கொண்டி ருக்கிறது என்பதை காணொளியுடன் விளக்கிக்கூறி, அதற்







காக ஜெபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து, வேதத்திலும், தேவன் பேசும் தீர்க்கதரிசன வார்த்தைகளிலும் மறைந்திருக்கும் ஏழு பரிமாணங்கள் குறித்தும், கர்த்தருடைய வார்த்தைகளை நாம் எப்படி பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக்குறித்தும் முக்கியமான வழிமுறைகளை தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் தெளிவாய் கற்றுக் கொடுத்தபோது வந்திருந்த ஜனங்கள் மிகுந்த ஆர்வமாய் செவிகொடுத்தார்கள்.

மேலும், தீர்க்கதரிசன வார்த்தைக்குறித்த மேலதிகமான காரியங்களை தெரிந்து கொள்ளும்படி காத்திருக்கும்போது தேவன் எப்படி இடைப்பட்டு பேசுவார் என்றும், அதன் அர்த்தங்களை தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தையும் விளக்கிக்கூறி, அதற்கேற்ற அபிஷேகத்திற்குள்ளாய் ஜனங்களை வழிநடத்தினார்கள். அப்பொழுது கர்த்தருடைய வல்லமையிலுனாலும், தீர்க்கதரிசனங்களை விளங்கிக்கொள்கின்ற ஞானத்தின் அபிஷேகத்தினாலும் ஜனங்கள் வல்லமையாய் நிரப்பப்பட்டார்கள். அநேகருடைய ஆவிக்குரிய கண்கள் அந்நாளில் திறக்கப்பட்டு, தேவ தரிசனங்களையும் ஆவிக்குரிய அனுபவங்களையும் பெற்றுக் கொண்டார்கள். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார்.







ஜனங்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களை சந்தோஷத்துடன் எழுதி பகிர்ந்து கொண்டார்கள். கர்த்தர் இன்றும் உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் தம் இரகசியங்களை வெளிப்படுத்த சித்தமா









யிருக்கிறார் என்பதற்கு இவர்கள் சாட்சிகள். உங்கள் விசுவாசம் வர்த்திக்கப்பண்ணவும், தேவ நாம மகிமைக்கென்றும் இப்பத்திரிகையில் சில ஆவிக்குரிய அனுபவங்களை வெளியிட்டிருக்கிறோம்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து, ஆவிக்குரிய அனுபவங்களையும் கடைசிக்கால தரிசனங்களையும் வெளிப்படுத்தினார். அபிஷேகத்தின் வல்லமையில் நிரப்பப்பட்டு, தேவனுக்கென்று கிரியை செய்யும்படி தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாய் ஜனங்கள் மிகுந்த சந்தோஷத்தோடு கடந்து சென்றார்கள். தேவனின் நாமத்திற்கு மகிமையுண்டாவதாக, ஆமென்..!



## துணுக்குச் செய்திகள்




கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயரை இட்டவர்கள் அந்தியோகியா பட்டணத்து ஜனங்கள்தான். கிறிஸ்துவினுடையவன் என்று பொருள்கொண்ட இப்புத்தகத்தை இகழ்ச்சியாகவும், கேலியாகவும் குறிப்பிடத்தான் அவர்கள் பயன்படுத்தினர். யூதர்கள் இயேசுவை கிறிஸ்து என்று ஒத்துக் கொள்ளாததால், அவருடைய சீஷர்களை கிறிஸ்தவன் என்று அழைக்காமல் நசரேயர்கள் என்றே அழைத்தனர். எனினும், கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு உலகமெல்லாம் இன்றுவரை அந்தியோகியர்கள் வைத்த பெயரே நிலைத்துவிட்டது.(அப்.11:26)

# ஆவிக்குரிய அனுபவங்கள்

ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தேவ தரிசனங்களைக் காண்பது என்பது இப்போது விசுவாசிக்கிற யாவருக்கும் சாத்தியமானது. இந்தக் கடைசிக்காலத்தில் ஆவிக்குரிய அனுபவங்கள் விசுவாசிக்கிற எல்லாருடைய வாழ்விலும் ஏராளமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது. இதுவும் கடைசிக்கால அடையாளங்களில் ஒன்று.



### 1. சகோதரி. முத்து மீனா - மதுரை

நமது தேசத்தின் அண்டை நாடான பாகிஸ்தானிலிருந்து ஆபத்து வரும். அத்திசையிலிருந்து பஞ்சத்தை கொண்டுவரும் வாசல்கள் திறக்கப்பட்டுள்ளது என்றும் கர்த்தர் வெளிப்படுத்தினார். பஞ்சாப் மாநிலத்திற்காக ஜெபிக்கும்படி ஏவப்பட்டேன்.

### 2. சகோதரி. மேகலா -சென்னை

கார்ப்பரேட் முதலாளிகளாலும், அரசியல் தலைவர்கள் தங்கள் சுயநலத்தின் காரணமாகவும், நீதித்துறைகள் இவர்கள் கொடுக்கும் திட்டங்களை சட்டங்களாக கொண்டு வந்து ஜனங்களை நெருக்கும் என்றும் உணர்த்தப்பட்டேன். ஒரு சர்ப்பம் தன் நாவை நீட்டியுள்ளதை பார்த்தேன். குரங்கும் மனிதனுமல்லாத ஒரு உருவம் வேகமாக வந்து சர்ப்பத்தின் நாவை தொடுகிறது. பின், ஒரு பெரிய வாசலிலிருந்து ஒரு வாலிபப் பெண், தன் இரு கரங்களில் மண்ணை எடுத்து வாசலை நோக்கி வீசி தேசத்தை சபிக்கிறதைக் கண்டேன். அந்த பெண்ணின் சாபம் தேசத்தில் வரவே கூடாது என ஜெபிக்கும்போது, என் கண்களுக்கு முன்பாக ஒரு பெரிய வளைவை கண்டேன். அந்த வளைவுத் தூணில் 7×24 என எழுதப்பட்டிருந்தது. கடைசி ஜெப வேளையில் ஒரு பெரிய நெருப்பு என் ஆவியை தொட்டதும், அதனால் உண்டான அனலை என் ஆவியிலே பலமாய் உணரவும் கர்த்தர் கிருபை கொடுத்தார்.

### 3. சகோ. ஜான்சன் - கேரளா

அரசாங்கம் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வதனால் செயற்கை பற்றாக்குறை மூலம் இந்த பஞ்சம் ஏற்படும் என்றும், அரசாங்கம் மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் மூலம் உணவுப் பொருட்களின் கொள்முதல் மற்றும் விற்பனையை கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளது என்றும், வரி அதிகரிப்பு மற்றும் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் வாங்கும் திறன் குறைவதற்கான வழி உண்டாகும். பஞ்சம் மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்டு, இந்தியர்களைக் கட்டுப்படுத்தும். இதனால் அனைத்தும் பொது விநியோக முறையின் கீழ் வரும் என்று வெளிப்படுத்தப்பட்டேன்

### 4. சகோதரி. பாக்கியலட்சுமி - சென்னை

வலுசர்ப்பத்தை வணங்கும் தேசமாகிய சீன தேசத்தின் மூலம் இந்தியாவில் பஞ்சம் வரவிருப்பதை கர்த்தர் எனக்கு உணர்த்தினார். இந்தியாவின் மக்கள் தொகையையும், பொருளாதாரத்தையும் குறிவைத்து தாக்குவான். இதனால், தேசத்தில் ஜனங்களின் எண்ணிக்கை

குறையும். பொருளாதாரத்தை தொழில்நுட்பம் மூலமாக குறிவைத்து தாக்குவான். இதனால் நம் மக்கள் தொகையும் பொருளாதாரமும் பின்தங்கிப் போகும். அமெரிக்கா அதிபர் இந்திய தேசத்தில் பஞ்சம் வருவதற்கு மிகப்பெரிய பங்கு வகிப்பார். அவருக்கு தலைவர்கள் கதவை திறப்பார்கள். சீன தேசம் இந்திய தேசத்தில் பஞ்சம் வர தங்கள் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதாக கர்த்தர் வெளிப்படுத்தினார்.

## 5. சகோதரி. ஞான சௌந்தரி - திருநெல்வேலி

இந்தியாவில் அழிவு எங்கே இருந்து வருகிறது என்று ஜெபித்த போது, டெல்லியை கர்த்தர் வெளிப்படுத்தினார். இந்த பாதிப்பு பிரதமர் மற்றும் கார்ப்பரேட், மருத்துவத்துறை மூலமாக வருகிறது என்றும், இவர்களுக்குப் பின்னால் வலுசர்ப்பத்தையும் கண்டேன். அந்த சர்ப்பத்தின் வாயிலிருந்து வைரஸ் பரவ செய்கிறதையும், இதில் பாதிக்கப்பட போவது 5 வயதுகுட்பட்ட குழந்தைகளும், முதியவர்களும் என்றும் பார்த்தேன். மதுரைப் பட்டணத்தில் வீதியில் இளம் வாலிப பிள்ளைகள் சடலமாக கிடக்கிறதைப் பார்த்தேன். அஸ்தரோத் ஆவி கோபத்தோடு நடனம் பண்ணுவதையும், அதன் காலின் கீழே ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளை மிதித்து, நசுக்கி இரத்தமாக அந்த குழந்தைகள் மரித்து கிடப்பதையும் பார்த்தேன். அணு உலை வெடித்து அக்கினி எரிகிறதையும் கர்த்தர் காண்பித்தார்.

## 6. சகோதரி. சுலோச்சனா - சென்னை

சர்ப்பத்தின் தேசமான சீனாவிலிருந்து தீமை வரப்போகிறது. அது விவசாயத்தை முற்றிலும் அழிக்கும்படியான காரியம். பாகிஸ்தான் பகுதியிலிருந்து தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் வருதனால் பல தீமைகள் வருமென்று மனதில் உணர்த்தப்பட்டேன். கர்த்தரின் அபிஷேகம் என்னை நிரப்பினதையும், தேவ கரம் என் நாவை தொட்டதையும் உணர்ந்தேன்.

## 7. சகோதரி. பிளஸ்ஸி - தூத்துக்குடி

பள்ளிகளில் படிக்கும் சிறு பிள்ளைகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஜெபிக்க வைக்கும்படி தேவன் உணர்த்தினார். எங்கே இருந்து இந்த பஞ்சம் தொடங்கும் என ஜெபித்த போது, பீகார் மாநிலத்தின் பெயரை கர்த்தர் நினைவூட்டினார்.

## 8. சகோ. அந்தோணி - இராமநாதபுரம்

பொன்னினாலான உடன்படிக்கை பெட்டி இங்கே இருப்பதாக கர்த்தர் எனக்கு காண்பித்தார். பூமியின் மேல் காரிருள் வருகிறது என்றும், அப்போது வானத்தில் ஒரு வலுசர்ப்பம் வளைந்து நெளிந்து உலாவியதையும் கண்டேன். ஒரு வெண்ணிற சிறகு எழும்பி நின்றது. அப்போது, கர்த்தர் தமது அபிஷேகத்தினால் என்னை நிரப்பினார். இன்று முதல் உன்னை தீர்க்கதரிசியாக முத்திரை போடுகிறேன் என்ற வார்த்தையை கொடுத்தார்.

## 9. சகோதரி. ரோஸ்லின் - கோவை

என் நாவில் அக்கினி அபிஷேகமும், நாவின் மேல் மற்றொரு நாவு இருந்ததைப் போலவும் உணர்ந்தேன். இருதயம் அக்கினியால் நிறைந்திருந்தது. ஜெப நேரத்தில் சீன தேசத்திலிருந்து நமது இந்திய தேசத்திற்கு மறைமுகமாக சிலர் வருகிறார்கள். அவர்கள் மூலம் பஞ்சம் வரப்போகிறது. ஆபத்து இந்திய தேசத்திற்கு வருகிறது. ஓணான் போல் தலை, வால் நீளமாக இருக்கிறது. பஞ்சம், நெருக்கம் ஆபத்து வரப்போகிறது என்று உணர்த்தப்பட்டேன்.

## 10. சகோதரி. எலிசபெத் - பெங்களூர்

ஆராதனை வேளையில், கர்த்தர் என்னை தமது ஆவியினால் நிரப்பினார். என் தலை முதல் கால் வரை, நெருப்பு போல மிகவும் சூடாக உணர்ந்தேன். ஜெப வேளையின் போது, கர்த்தர் என்னை தீர்க்கதரிசன அபிஷேகத்தினாலும் ஜெப அபிஷேகத்தினாலும் நிரப்பினார். நான் இரண்டு பக்கமும் கூர்மையாக இருந்த ஈட்டியை பார்த்தேன். கறுப்பு நிறத்தில் பெரிய கேன்களைப் பார்த்தேன், அவை பெட்ரோல், எண்ணெய் மற்றும் டீசல் ஆகியவற்றால் நிரப்பப்பட்டிருந்தன. அதற்கு முன்பிருந்த வாய்க்காலின் முன்பு வெள்ளை நிறமான விஷம் நிறைந்த சர்ப்பத்தை கண்டேன். சீனா மற்றும் அமெரிக்கா தலைவர்கள் அதன் பின் இருப்பதை பார்த்தேன். பெரிய புதையல் பெட்டிகளைப் பார்த்தேன். நமது நாட்டின் செல்வம் அதிகாரிகளாலும், அரசாங்கத்தாலும் மறைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை ஒளிப்பிடத்தில் மறைத்து, இரகசியமாக செய்கி

றார்கள். பின், எனது இடதுபுறத்தில் சேனைகள் அணி வகுத்து நின்றதை பார்க்க முடிந்தது. தேவ வார்த்தை யிலுள்ள ஏழு நிலைகளை புரிந்து கொள்வதற்கேற்ற ஞானத்தை நான் கேட்டதால், கர்த்தர் என்னை அபி ஷேகித்தார். புதிதாகப் பிறந்த குழந்தையைப்பற்றிய ஒரு தரிசனத்தை பார்த்தேன், அதைப்பற்றின மேலதிகமான காரியங்களை கர்த்தரிடம் கேட்க வேண்டும்

## 11. சகோதரி. பானுமதி - இராமநாதபுரம்

ஒரு பெரிய தீச்சுடர் என் நாவை தொட்டது. என்னை சுற்றிலும் அக்கினியாய் இருந்தது. புதிய அந்நியபாஷை யினால் நிரப்பினார். அந்த வார்த்தை என் வாயிலிருந்து தொடர்ந்து வந்தது. அக்கினியாய் என்னை நிரப்பி மூடினது.

## 12. சகோதரி. சந்திரா - தூத்துக்குடி

சாத்தான் மனிதர்களின் மூலம் பஞ்சத்தை கொண்டு வந்து பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்த திட்டம் கொண் டுள்ளான் என உணர்த்தப்பட்டேன். இறுதி ஜெப நேரத்தில் குளிர்ந்த காற்று ஊதி, அக்கினிக்குள்ளாக நான் நின்றது போல புதிய அனுபவம் கிடைத்தது. புதிய அபிஷேகம் கிடைத்தது.

## 13. சகோதரி. ஹில்டா பிரிசில்லா - மதுரை

ஜெப வேளையில் கர்த்தர் தீர்க்கதரிசன அபிஷேகத்தி னால் நிறைத்தார். அப்போது என் இருதயத்தில் சகல மலைகளும், குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலா னவை செவ்வையாகும், கரடு முரடானவை சமமாகும் என்ற வசனத்தை கர்த்தர் பேச வைத்தார். பஞ்சத்திற் காக ஜெபித்த போது, அமித்ஷா அவர்களை கர்த்தர் காண்பித்து அவர் வாயில் ஒரு சிறிய பெண் குழந்தை யை கவ்விக் கொண்டிருப்பதை போலவும், அந்த குழந்தை தன் கை கால்களை உதறிக் கொண்டு உயிருக்கு போரா டியதையும், அந்த இடம் டெல்லி என்றும் கர்த்தர் காண் பித்தார். விவசாயிகளுக்கு விரோதமாக விதை, தானி யங்கள், பெருத்தன வியாபாரிகள் கையில் உள்ளது என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். தமிழ்நாட்டில் அரசி யல்வாதிகள் விவசாயிகளின் நண்பன் போல் பேசி பொல்லாதவர்களுக்கு கதவை திறந்து கொடுக்க முயற்சி செய்கிறார்கள் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அக்கினி நதியாக என் மீது அபிஷேகம் இறங்கி நிரப்பினது.

## 14. சகோதரி. அகிலாவதி - திருவள்ளூர்

இந்திய வரைபடத்தில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பெரிய பாம்பு ஒன்றை பார்த்தேன். தலை காஷ் மீரிலும் வால் கன்னியாகுமரியில் இருந்தது. இந்திய வரைபடத்தின் மேல் பாதி வரை இருந்த அந்த பாம் பின் உடல் மிகவும் தடிமனாகவும், வாய் நன்றாக திறந்தும் இருந்தது. மீதி பாதி உடம்பிலிருந்து வால் வரை மெல்லி யதாக கன்னியாகுமரியில் முடிந்தது. தங்க நிறத்தில் ஒரு வாசலை பார்த்தேன். அந்தப் பாதை பாலம் போல இருக்கிறது. அந்த வழி ஒரு பெரிய அரண் மனைக்கு போகிறது. ஒரு பெட்டியை பார்த்தேன். அதின் உள்ளே கோதுமை கதிர்களையும், பெட்டியின் நான்கு முனை யில் ஒரு முனையில் வேல் போல கறுப்பு மற்றும் தங்க நிறத்தில் இருந்ததைப் பார்த்தேன்.

## 15. சகோதரி. சுப்ரிதா - ஈரோடு

பொருளாதார வீழ்ச்சியின் மூலமாக தீவிரமான பஞ்சம் வரும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். தேசம் முழுவ



தும் பாதிக்கும்படியான ஒரு பஞ்சம் வரும். இயற்கையின் மூலமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக வரும். வெட்டுக்கிளி என்று சொல்லும்போது திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் காண்பிக்கப்பட்டது.

### 16. சகோ. இன்னாசி முத்து - திருநெல்வேலி

தேசத்தில் பஞ்சம் வர முக்கிய காரணம் கருக்கலைப்பு மிகுதியாக நடப்பது தான் என்று வெளிப்படுத்தினார்.

### 17. சகோதரி. கிருபா சுரேஷ் - திருவனந்தபுரம்

பஞ்சத்திற்கு நம் தேசத்தில் கதவுகளை திறந்து கொடுக்கும் அரசியல்வாதிகளையும், சீனா தேசம் நம் தேசத்தில் அவர்களுடைய பொருட்களை இறக்குமதி செய்வதால் சீர்குலைவு வருமென்றும் வெளிப்படுத்தினார். ஏழு விதமான தீர்க்கதரிசனங்களை கற்றுக்கொண்டேன்.

### 18. சகோதரி. மகாலட்சுமி - சென்னை

வட இந்தியாவில் பஞ்சம் வரும் என்று உணர்த்தப்பட்டேன். சீன அதிபர், ஜம்மு காஷ்மீர் மற்றும் உத்தரகாண்ட் அரசியல்வாதிகள், கார்ப்பரேட் நிறுவனம் வழியாக தான் பஞ்சங்கள் வரும் என்றும், அவர்களின் ஆதாயத்திற்காக இந்த பஞ்சத்தை வர வைக்கிறார்கள் என்றும் உணர்ந்தேன்.

### 19. சகோ. ஜெய பாஸ்கரமணி - சென்னை

தேசத்தின் மேல் பகுதியில் ஒரு வாசல் மலைமேல் இருக்கிறது. அது அடைக்கப்பட்டிருந்தது. கதவிற்கு அருகே வாசல் காவலன் இருக்கிறான். ஒரு நபர் வந்தவுடன் அந்த கதவு திறந்தது. சீனா அதிபர் கையில் ஒரு குடுவையுடன் உள்ளே வந்து அதை அந்த நபரின் கையில் கொடுக்கிறார். வாங்கி, காத்திருந்த முதலையின் வாயில் ஊற்றினார். பின்பு ஒரு பெண் பல வீனமாய் நோயினால் பாதிக்கப்பட்டு உட்கார்ந்திருக்கிறாள். அதைப் பார்த்த மற்றொரு பெண் அவளை மருத்துவமனைக்கு கூட்டி செல்கிறாா். அவரும் அந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். இது சர்ப்பத்தால் அந்த தேசத்தில் செய்யப்பட்ட தந்திரம் என்று கர்த்தர் சொன்னார். தீர்க்கதரிசனங்களை விளக்கிச் சொல்லி ஜெபிக்கும் போது, புது பாஷைகளை பெற்றேன். கழுகு செட்டைகளை உயர்த்தி பறக்கிறதை பார்த்தேன்.

### 20. சகோ. சிவ்ராஜ் - நீலகிரி

அபிஷேகம் என்னை நிரப்பியது. இடி இடிக்கிறதையும், பிரகாசமான தங்க நிற வெளிச்சத்தையும் பார்த்தேன். இருபுறமும் கருக்குள்ள ஒரு பட்டயத்தை பார்த்தேன், அதன் கைப்பிடி தங்க நிறத்தில் இருந்தது. கர்த்தரின் கரம் என் மேல் இருந்ததை உணர முடிந்தது. இது வரை எனக்கு தெரியாத புதிய அந்நியபாஷையில் என்னால் நீண்ட நேரம் பேச முடிந்தது.

### 21. சகோதரி. மதுமதி - ஈரோடு

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் கையில் பணத்தை வைத்து சுருட்டி வைத்திருப்பது போல காண்பிக்கப்பட்டது. பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாய் இருப்பார்கள் என்றும், வருகிற நாட்களில் பொருளாதாரத்தில் ஆபத்தை உண்டு பண்ண திட்டம் தீட்டுவதாகவும் எனக்குள் உணர்த்தப்பட்டேன். தரிசனத்தில் ஒரு கறுப்பு நிற குதிரையை பார்த்தேன். குதிரையின் முகத்தை ஒரு கை துடைப்பதாகவும் தெரிந்தது.

### 22. சகோ. பேட்ரிக் ஜோயல் - சென்னை

வங்கிகள் ஏழை ஜனங்களின் தொழிலுக்கு கடன் வழங்க முன்வரும். சில நாட்களுக்கு பின்பு, ஒப்புதல் அதிகாரி ஏழை ஜனங்களின் தொழிலை சரிபார்த்த பின், அதை அழித்துவிடுவார். இந்தச் சம்பவம் நம் தேசத்தில் நடைபெறுகிறது என்பதை அறிந்து கொண்டேன். பஞ்சத்திற்காக ஜெபிக்கும்போது இது தொடர்ச்சியாக என் மனதில் வந்து கொண்டேயிருந்தது.

### 23. சகோதரி. முத்துலட்சுமி - தூத்துக்குடி

ஒரு தராசு உள்ளது, அதன் ஒரு பக்கம் பொருள் நிரம்பியும், மற்றொரு பக்கம் குறைவாகவும் இருப்பதாக தரிசனத்தில் பார்த்தேன். அது இரண்டும் மேலும் கீழுமாக அசைந்தது, நீதியைக்குறித்தும் அநியாயத்தைக்குறித்தும் கர்த்தர் பேசினார்.

> **“ கர்த்தருடைய வார்த்தையை விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், வேத வசனங்களை வாசித்து, உட்கொண்டு, அதோடு பழகுகிற அனுபவமுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். ”**

# கர்த்தரே என் பெலன்



சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான்

*என் பெலனாகிய கர்த்தாவே உம்மில் அன்புகூருவேன்.* சங்கீதம் 18 : 1

இந்த சங்கீதத்தை தாவீது எந்த சூழ்நிலையில் எழுதினார் என்றால், சத்துருக்கள் அவரை சூழ்ந்திருந்த நேரத்திலும், சவுல் ராஜாவின் கைக்கு நீங்கலாக்கி விடுவித்த அந்த நாளிலும் அவர்தான் எனக்கு பெலன், கேடகம், கோட்டை என்று கர்த்தரை தன் பெலனாக சொல்லிப் பாடினது தான் இந்த 18ம் சங்கீதம்.

துன்பங்கள் நிறைந்ததும், நிச்சயமற்றதுமான வாழ்க்கையைத்தான் நாம் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு நிமிடத்தையும் எதிர்கொள்ள தேவ பெலன் நமக்கு அவசியமாக இருக்கிறது. அதுவே அசைக்க முடியாத ஆழமான அஸ்திபாரமாக இருக்கும். நம் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனையே நம்பி, சார்ந்து கொள்ளும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவ வல்லமையை, பலத்தை தந்து விசுவாசத்தோடு கர்த்தருக்குள் நிலைத்திருக்கும் தைரியத்தையும், அதிகாரத்தையும் தேவன் நமக்கு தருகிறார். அப்போது இவ்வுலகிலிருந்து வருகிற புயல் போன்ற எல்லாப் பிரச்சனைகளையும் சோதனைகளையும் தைரியமாய் எதிர்த்து நிற்கவும், ஜெயிக்கவும், தாண்டி கடந்து செல்லவும் முடியும்.

## எப்போது சோர்ந்து போகிறோம்?

### 1. ஆவிக்குரிய வறட்சி

கர்த்தர் என்னுடன் இல்லை, நான் தனியாக இருக்கிறேன் என்று கர்த்தரை வாழ்வில் தூரமாக உணரும் தருணங்களில் நாம் சோர்ந்து போகிறோம்.

### 2. வாக்குத்தத்தங்களின் தாமதம்

நம் வாழ்வில் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் உடனே நிறைவேற வேண்டுமென்று அதிகமான ஆசையோடு காத்துக் கொண்டிருப்போம். ஆனால் நிறைவேற கொஞ்சம் தாமதமாகும்போது பயமும், அவிசுவாமும் சூழ்ந்து நம்மை சோர்வடையப்பண்ணும்.

### 3.எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படாத நிலை

நாம் விரும்பினபடி நம் வாழ்க்கை சந்தோஷமாக அமைய வேண்டுமென்று நினைத்திருப்போம். அது பொய்த்துப் போகும்போதும், நாம் நினைத்தபடி சரியாக அமையாதபோதும் சோர்வுகளை சந்திக்கிறோம்.

## எந்த சூழ்நிலைகளில் கர்த்தர் பெலனாக இருக்கிறார்?

### 1. சோதனைகளில், பாவப் போராட்டங்களில் :

நாம் சந்திக்கிற போராட்டங்களையும், நம்மை எதிர்க்கும் பாவங்களையும் நாம் எதிர்கொண்டு ஜெயிக்கும்படி கர்த்தரே நமக்கு பெலனாக இருக்கிறார்.

### 2. மனம் சோர்ந்து தளர்ந்திருக்கும் நேரங்களில் :

பல நேரங்களில் இழப்புகள், ஏமாற்றங்கள், துன்பங்களை சந்தித்து, அதிலேயே மூழ்கி, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறோம். கர்த்தரையே சார்ந்து கொள்ளுகிறபொழுது அவரே நம் பெலனாக இருந்து, இந்த சூழ்நிலைகளை தாங்கிக் கொள்ளவும், அதை எதிர்க்கொள்ளவும், கர்த்தருக்குள் நம்மை திடமாக நிறுத்தவும் கர்த்தரே நம் பெலனாக இருந்து நடத்துகிறார். மட்டுமல்ல, சோர்ந்து போயிருக்கிற நம் ஆத்துமாவை உயிர்பெற்று எழும்பச் செய்கிறார்.

### 3. தேவ சித்தத்தை நிறைவேற்றும்போது :

*மோசே கர்த்தரை நோக்கி; ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் ஒமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான்*

*வாக்குவல்லவன் அல்ல. நான் திக்கு வாயும் மந்தநாவும் உள்ளவன் என்றார்.* யாத் 4 :10-12

மோசே கர்த்தர் கொடுக்கும் கனமான ஊழியத்தை செய்ய தன் பலத்தினால் முடியாது என்று தன் குறைகளை முன்னிறுத்தி தன்னை தகுதியற்றவராக உணர்ந்து தேவனிடம் சொல்லுகிறார். கர்த்தர் அவரை பெலப்படுத்தி, இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும் வல்லமையுள்ள தலைவராக மாற்றுகிறார். தேவனால் அழைப்பு பெற்றவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்து தேவனை நிரூபித்து காட்டி, தேவ சித்தத்தை நிறைவேற்ற தேவன் தம் பெலனை கொடுத்து நடத்துகிறார்.

நம் வாழ்வில் பதட்டம், பயம், அவிசுவாசம், தனிமை, சரீர பெலவீனங்கள், தோல்விகள், இழப்புகளை சந்திக்கிற சூழ்நிலைகளில், அவைகளை எதிர்கொள்ள கர்த்தரே நம் பெலனாக இருந்து நடத்துகிறார். வேதத்தில் தாவீதை இதற்கு உதாரணமாக பார்க்கலாம்.

## தாவீதை தேவன் எப்படி பெலப்படுத்தினார்?

### 1. மறைவான இடங்களில் யாருக்கும் தெரியாமல் பெலப்படுத்தினார்.

தாவீது ராஜாவாகும் முன் மறக்கப்பட்ட, யாரும் அறியாத ஒரு ஆடு மேய்க்கும் சிறுவனாக தான் இருந்தார். சிங்கத்தோடும், கரடியோடும் சண்டை செய்ய கர்த்தர் தான் பெலன் கொடுத்தார். அவர் உள்ளான மனிதனில் பலமடையும்படி மறைவிடங்களில் தேவன் அவரை உருவாக்கிக் கொண்டே வந்தார்.

### 2. தாவீதின் பெலன் கவணில் இல்லை, கர்த்தரில் இருந்தது.

கோலியாத்துடன் யுத்தத்திற்கு போகிற போது தாவீதின் கையில் ஒரு ஆயுதமும், கவசமும் இல்லை. தன்னிடத்திலிருந்த அனுபவத்தைக்கூட கொண்டு போகவில்லை. தேவ பலத்தையே நம்பி, அதை மட்டும் கைகளில் எடுத்து கொண்டு போனார். கர்த்தர் பெரிய ஜெயத்தைக் கொடுத்தார்.

### 3. எந்த சூழ்நிலையிலும் கர்த்தரைத் துதித்தார்.

தான் நம்பின மனிதர்கள், சிநேகிதர்கள் எதிரானபோதும், ஆதரவுகள் தோல்வியடையும்போதும் கர்த்தர் மட்டுமே தன் பெலனாக இருந்ததை நன்றாக உணர்ந்திருந்தார். பிரச்சனைகளாயிருக்கலாம், இடுக்கண்களாயிருக்கலாம், எந்தச் சூழ்நிலையாக இருந்தா லும் அவர் தேவனைத் துதித்தார். இதுதான் தாவீதின் முக்கியமான குணமாயிருந்தது. அதுவே அவர் வாழ்வில் பெலனாக இருந்தது. தாவீதின் சங்கீதங்களை வாசிக்கும்போதே நமக்கு தெரியும், துதிகளும் நன்றிகளும் நிரம்பி வழிவதைப் பார்க்க முடியும். முதிர்வயது வரைக்கும் தேவனை துதிக்கவும், அவர் மகத்துவங்களை அறிவிக்கவும் தவறவே இல்லை.

## தேவ பெலனை பெறுவது எப்படி?

### 1. நம் பலவீனங்களை அறிக்கையிட்டு, ஒப்புக் கொடுக்க வேண்டும்.

நம் பலவீனங்களை மறைக்காமல் தேவ சமுகத்தில் அப்படியே ஒப்புக்கொடுத்து அறிக்கையிட வேண்டும். நம் சுய பலத்தையும், சுய புத்தியையும் சாராமல் தேவன் கைகளிலே முழுமையாக அர்ப்பணித்து, இதெல்லாம் என் பலவீனம், இந்த இடத்திலெல்லாம் நான் தவறுகிறேன், என்னால் முடியவில்லை என்று தேவனிடம் அறிக்கையிட்டால், தேவ பெலன் நம்மை முழுவதும் நிரப்பி ஆளுகை செய்வதை பார்க்க முடியும். நம் வாழ்க்கையை முற்றிலுமாக அர்ப்பணித்தால் மட்டுமே தேவ பெலன் கிடைக்கும்.

*அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.* 2 கொரி 12:10

### 2. வசனங்களை கருத்தாய் வாசித்து தியானிக்க வேண்டும்.

வேத வசனத்தை மேலோட்டமாக படிக்காமல் ஆழமாய், கருத்தாக தியானிக்க வேண்டும். தேவ பாதத்தில் காத்திருந்து அதிக நேரம் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்க ஜெபிக்க நாம் மறுரூபமாக்கப்படுவோம். அப்போது, தாவீதைப்போல எந்தச் சூழ்நிலைகளிலும் துதிக்கிறவர்களாக நாம் மாறுவோம். தேவனை நினைத்து துதிக்க துதிக்க தேவ பெலன் பெருகும்.

நம் வாழ்வில் கர்த்தரே நம் பெலனாக இருக்கும்போது, புயல்போன்ற பிரச்சனைகளோ சோதனைகளோ எது வந்தாலும் எதுவொன்றும் நம்மை தொடவும், அசைக்கவும் முடியாது. நிலையாக நிற்போம். காரணம், கர்த்தரே நம் அடித்தளம்.! நாம் உடைந்துபோகும் தருணங்களில், நம்மையே இழந்து நிற்கும் வேளைகளில் தேவ பெலன் நம்மை தாங்கிக் கொள்ளும், வழிநடத்தும். கர்த்தர் நமக்கு பெலனை தருவது மட்டுமல்ல, அவரே நம் பெலனாய் இருக்கிறார் என்பதே தேவன் நமக்கு தரும் வாக்குத்தத்தம். பெலனான கர்த்தரை நம் வாழ்வில் கொண்டிருப்பதால் ஒருநாளும் நாம் அசைக்கப்படுவதில்லை.

ஜெபிக்கலாம் வாங்க

# பெருகி வரும் வேலை இழப்புகள்



கடந்த சில வருடங்களாக இந்திய தேசத்தில் மட்டுமல்ல, எல்லா தேசங்களிலும் பல காரணங்களினிமித்தம் வேலை இழப்புகள் அதிகரித்துக் கொண்டே வருகிறதை செய்தித்தாள்களில் படித்திருக்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் உலகளவில் 4.2 லட்சம் பேர் வேலையிழந்திருப்பதாகவும், அதில் குறிப்பாக, இந்திய தேசத்தில் மட்டும் 35000க்கும் அதிகமானோர் தங்கள் வேலைகளை இழந்திருப்பதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் பாதிக்கப்படுவது வேலையிழந்தவர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பங்களையும் இந்த வேலையிழப்பு பாதித்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் வேலையிழப்பு ஏற்பட்டுவிட்டது என்றால், அவர்கள் வாழ்வாதாரமே ஸ்தம்பிக்கப்பட்டு, அடுத்த வேளை என்ன செய்வது என்பது தெரியாமல் அவர்கள் திகைத்து நிற்கிறதைப் பார்க்கிறோம். பல குடும்பங்கள் சம்பளத்தை எதிர்பார்த்து, அதை நம்பித்தான் பிள்ளைகளின் கல்வி கடன்களையும், குடும்பத்தின் மருத்துவ செலவுகளையும், தவணை முறைகளில் வாங்கின அத்தியாவசிய பொருட்களுக்கான கடன்களையும் செலுத்திவிடலாம் என்று நினைத்திருப்பார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் குடும்பத்தில் யாராவது ஒருவர் வேலையிழப்பைச் சந்திக்கிறபோது, அந்தக் குடும்பங்கள் தங்கள் அன்றாட தேவைகளைக்கூட சந்திக்க முடியாதபடிக்கு திகைத்துப் போகிறதைப் பார்க்கிறோம். இதனால் பல குடும்பங்களில் குழப்பங்களும் சண்டைகளும் மன உளைச்சல்களும் ஏற்பட்டு குடும்பங்கள் பிரிந்து போகிறதும், உடைக்கப்படுகிறதுமான அநேக சம்பவங்கள் நம் தேசத்திலே அரங்கேறிக் கொண்டு வருகிறது. அடுத்து என்ன செய்வது, இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் அவர்கள் தற்கொலை செய்கிற நிலைமைக்குத் தள்ளப்படுகிறதையும் பார்க்கிறோம்.

இந்தியாவில் வேலையிழப்புகள் அதிகரித்து வருகிறதற்கு, தொழில்கள் குறைந்து வருகிறதினாலும், பொருளாதார பின்னடைவுகளினாலும், ஐ.டி துறையில் மறுசீரமைப்பு, ஏ.ஐ டெக்னாலஜிகள் அதிகரித்து வருகிறதினானாலும், கொரோனாவுக்கு பிந்தைய காலகட்டத்தின் பிரதிபலிப்பினாலும் தான் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கிறது என்றும் அநேகர் பல கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். இந்த 2025ல் மட்டுமே ஒரு முக்கியமான கன்சல்டன்ட் நிறுவனத்தில் சுமார் 12000 பேரை ஒரே நேரத்தில் வேலையிலிருந்து நீக்கியிருந்ததை செய்திகளில் பார்த்திருப்போம். அப்படியென்றால், அவர்கள் குடும்பங்கள் எப்படி பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்.

பொருளாதார பின்னடைவுகளினால் ஏற்படும் வேலையிழப்புகளின் பாதிப்புகள் ஒரு பக்கம் இருந்தாலும், அதே நேரத்தில் வெளிநாடுகளில் வேலை தேடிப் போகிறவர்களின் நிலை இன்னும் மோசமாக இருக்கிறது என்றே சொல்லலாம். ஏனெனில், அவர்கள் அங்கிருந்து வேலைகளை இழந்து திரும்புகிற அவல நிலை நம் தேசத்தில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றால் கடன்களையெல்லாம் அடைத்துவிடலாம் என்றும், நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் நம்பி, தங்கள் நகைகளை அடமானம் வைத்தும், கடன்

களை வாங்கியும் பணம் ஏற்பாடு செய்து அவர்கள் செல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு வேலையில்லை என்கிற நிலை வருகிறபோது வேலைக்குச் சென்ற நபரும், அதற்காக கடன்களை வாங்கிக் கொடுத்த குடும்பத்தாரும் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்று நினைத்துப் பாருங்கள்.

அதுமாத்திரமல்ல, இந்தியாவில் இன்னும் பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. பல முக்கியமான அரசு சார்ந்த துறைகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதை செய்திகள் வாயிலாக பார்த்திருப்போம். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், விமான நிலையங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள், இரயில் வேதுறை, மின் உற்பத்தி நிறுவனங்கள், தொலை தொடர்பு துறை, கல்வித்துறை, துறைகங்கள், உழவர் சந்தைகள் என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. இதனால், நம் தேசத்தில் உள்ள பல இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேலையில்லாமல் போகிற நிலை வரும்.

தற்சமயத்தில், நம் தேசத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களுடைய வளர்ச்சி அதிகமாக பெருகிக் கொண்டே வருகிறதைப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட நிறுவனங்களில் முதலீடு செய்கிறவர்கள் பெரும் செல்வந்தர்களாகத்தான் இருக்க முடியும். அவர்களால் தான் அதில் முதலீடுகளைச் செய்ய முடியும். கார்ப்பரேட் முதலாளிகள் வங்கியில் பல ஆயிரம் கோடிகளைக் கடன் வாங்குகிறதும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதைச் செலுத்த முடியாததினால் வங்கிகள் அதைத் தள்ளுபடி செய்கிறதுமான சம்பவங்கள் நிறைய நடந்து கொண்டு வருகிறது நம் எல்லாருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆகையால், நம் தேசத்தில் பெருகிவருகிற வேலையிழப்புகளுக்கு தேவனாகிய கர்த்தர் நல்ல ஒரு தீர்வைக் கட்டளையிடவும், இப்படிப்பட்ட அவல நிலைகள் தேசத்தில் இனியும் தொடரக்கூடாது என்பதற்காகவும் தேவ ஜனங்களாகிய நாம் மன்றாடி ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கிறவர்கள் எழும்பி தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து திறப்பிலே நின்று பாரத்தோடும் கண்ணீரோடும் மன்றாடி ஜெபித்தால் தேசத்துக்கு நான் க்ஷேமத்தைக் கட்டளையிடுவேன் என்று கர்த்தர் வேதத்திலே வாக்குத்தத்தமாகச் சொல்லியிருக்கிறபடியினால் நாம் ஜெபிக்கலாம் வாங்க.!

## ஜெபக்குறிப்புகள்

**1**

1. நம் தேசத்தில் வேலையில்லாத் திண்டாட்டங்கள் மாறவும், திரளான வேலை வாய்ப்புகள் பெருகவும், வேலையிழப்பினால் சமாதானத்தை இழந்து, கடன் பாரத்தினால் மன உளைச்சலுக்குள்ளாகி தற்கொலை செய்துகொள்கிற நிலை நம் தேசத்தை விட்டு அகன்று போகவும், வேலையிழப்பினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு கர்த்தர் ஒருபுதியவாசலைத் திறந்து கொடுக்கவும் ஜெபிப்போம்.

**2**

2. வேலை இழப்பினால் குடும்பங்களில் ஏற்பட்டிருக்கிற பிரிவினைகள் மாறவும், தேசத்தினுடைய ஒட்டுமொத்தத் துறைகளும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளில் போய்விடாதபடிக்குத் தடுக்கப்படவும், வேலையிழப்பை ஏற்படுத்தக்கூடிய சகல தந்திரமான ஆலோசனைகளும் முடிவுகளும் செயலற்றுப் போகவும், தேசத்தின் வாழ்வாதாரத்தைக் கர்த்தர் நிலைநிறுத்திக் கொடுக்கவும் ஜெபிப்போம்.

## துணுக்குச் செய்திகள்

ஒரு பழங்கால புத்தகத்திற்கு எத்தனை கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கின்றனவோ அதைக் கொண்டுதான் அதன் தரம் நிர்ணயிக்கப்படும். இன்று அதிகமான கையெழுத்து மூலப்பிரதிகளைக் கொண்டு முதலாவது ஸ்தானத்தை வகிப்பது வேதாகமமே. மொத்தம் 24,000 பிரதிகள். உலகத்திலேயே இரண்டாவது இடத்தை வகிப்பது ஓமர் எழுதிய இலியட் என்ற காப்பியமே ஆகும். இதற்கு கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிகள் (Manuse Scripts) மொத்தம் 643 மட்டுமே. இரண்டாவது ஸ்தானம் வகிக்கும் புத்தகம் நெருங்க கூட முடியாதபடி முதல் ஸ்தானத்தில் இருப்பது வேத புத்தகம்தான். வேதம் தான் எங்கும்! எதிலும்.!



A NEW YOUTUBE CHANNEL OF

# VOICE OF JESUS MINISTRIES

## THE FINAL ALERT

(தி ஃபைனல் அலெர்ட்)

தினமும் இரவு 9 pm

ஞாயிறு
**தி ஃபைனல் கால்**

திங்கள்
**நடைமுறை பேச்சு**

செவ்வாய்
**நிறைவேறின தீர்க்கதரிசனம்**

புதன்
**மறைவில் மின்னும் நட்சத்திரம்**

வியாழன்
**பேசும் நிழல்கள்**

வெள்ளி
**வேதம் அறிவோம்**

சனி
**வேதமும் விஞ்ஞானமும்**

கடைசிக்காலத்தில் தேவனை சந்திக்கும்படி நம்மை ஆயத்தப்படுத்துவதற்கேற்ற செய்திகளும், இன்னும் பல கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.. காணத்தவறாதீர்கள்.. பிறருக்கும் அறிமுகப்படுத்துங்கள்...

## காணிக்கை செலுத்த விரும்புவோர் கவனத்திற்கு..

**VINCENT SELVAKUMAR**

**A/C NO. 910010022737183**

**VOICE OF JESUS MINISTRIES**

**A/C NO. 910010023338787**

BANK : AXIS BANK, RAMNAD BR

IFS CODE : UTIB 0001080

SHIFT CODE : AXIS IN BB 109




**சாத்தான் வரும் வாசல்**
(தமிழ் / ஆங்கிலம்)




## இயேசுவின் தொனியின் புதிய வெளியீடுகள்




**எழுப்புதலின் எதிரிகள்**
(தமிழ் / ஆங்கிலம்)

**FOR CONTACT**

(+91) 9788 404 333
(+91) 9731 722 977